(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 9.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2020 பெப்ரவரி 05, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** கல்வி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்

**கௌரவ எஸ். எம். சந்திரசேன,** சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட சீர்திருத்தங்கள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி,** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்

**கௌரவ விமல் வீரவங்ச,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறை மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** மின்சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** சுதேச வைத்திய சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** மனித உரிமைகள் மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** காணி மற்றும் காணி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா,** கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலா மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** சர்வதேச ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** உள்ளக வர்த்தக மற்றும் பாவனையாளர் நலனோம்புகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க,** புகையிரத சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** ஏற்றுமதிக் கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலங்க சுமதிபால,** தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,** வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** துறைமுக அபிவிருத்தி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அசோக் அபேசிங்க**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ ஜோன் அமரதுங்க**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ வசந்த அலுவிஹாரே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அகில விராஜ் காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ பியசேன கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ மொஹான் லால் கிரேரு**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த**

**கௌரவ முஹம்மது நசீர்**

**கௌரவ எஸ். பீ. நாவின்ன**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ கருணாரத்ன பரணவிதான**

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ அஜித் பி. பெரேரா**

**கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ ஏ. டி. பிரேமதாச**

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ அர்ஜுன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ சமன் ரத்னபிரிய**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க**

**கௌரவ வருண லியனகே**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ ரவீந்திர சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ லக்ஷ்மன் செனெவிரத்ன**

**கௌரவ சுஜீவ சேனசிங்க**

**கௌரவ வசந்த சேணாநாயக்க**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ விஜித் விஜயமுணி சொய்சா**

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ டீ. பி. ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ மனோஜ் ஹேவாகம்பலகே**

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. புதிய உறுப்பினர்களின் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை:** அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ வெலிகொடகே சமன் ரத்னபிரிய சில்வா சட்டத்தினால் வேண்டப்பட்டவாறு உறுதிப்பிரமாணம் செய்து சபாபீடத்திலுள்ள புத்தகத்தில் கையொப்பமிட்டார்.

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"இலங்கை மத்திய வங்கியினால் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி பிணைமுறி விநியோகம் தொடர்பாக புலனாய்வுசெய்து அது சம்பந்தமான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி புலனாய்வு ஆணைக்குழுவின் விதப்புரையின் பிரகாரம், சம்பந்தப்பட்ட திறைசேரி முறி விநியோகம் பற்றி தயாரிக்கப்பட்ட தடயவியல் கணக்காய்வு அறிக்கை பாராளுமன்றத்தின் அனைத்து கௌரவ உறுப்பினர்களினதும் தகவலுக்காக 2020 சனவரி 21 ஆந் திகதி பாராளுமன்ற சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் இந்த அறிக்கையுடன் தொடர்புடைய, இணைப்புகளையும் முன்னிலைப்படுத்தல்களையும் வழங்கவில்லையென்பதால் அவற்றைப் பெற்றுத்தருமாறு என்னால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்கிணங்க கட்டப்பட்ட 56 தொகுதிகளைக் கொண்ட (10,000 பக்கங்களுக்கு மேலான) இந்த தடயவியல் கணக்காய்வு அறிக்கையின் இணைப்புகளும் முன்னிலைப்படுத்தல்களும் அடங்கிய இறுவட்டுக்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கும் பொருட்டு பாராளுமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளனவென்பதையும், அதன் 3 அச்சுப் பிரதிகள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆய்ந்தறிவதற்காக பாராளுமன்ற நூனிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதென்பதையும் அறிவிக்க விரும்புகிறேன்.

முதலில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த தடயவியல் கணக்காய்வு அறிக்கையிலும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட இணைப்புகள் மற்றும் முன்னிலைப்படுத்தல்களிலும் ஒருசில ஆட்களின் தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான தகவல்கள் உள்ளடங்குவதால், அவற்றைக் கவனமாகவும் பொறுப்புடனும் ஆய்ந்தறியுமாறு கௌரவ உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். "

**II**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 (1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு சனவரி 24 ஆம் திகதி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்:—

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி"

**III**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 சனவரி 24 ஆம் திகதி அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க

கௌரவ அசோக் அபேசிங்க

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ மாவை. சோ. சேனாதிராசா

கௌரவ டி.வீ. சானக"

**IV**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளுக்கமையவும் 2020 சனவரி 24 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அவர்களின் தலைமையில் பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்"

**V**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111(21) மற்றும் (22) (அ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 சனவரி 24 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் கௌரவ வருண லியனகே அவர்கள் சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கடமையாற்றுவதற்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்".

**3. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2019.12.01 முதல் 2019.12.31 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினை சமர்ப்பித்து அக்குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு, அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை, கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை, போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை, பெண்கள் மற்றும் பால்நிலை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர் —

(i) 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 3(ஓ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் மருத்துவகப் பரீட்சிப்புகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 2145/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(ii) 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142

ஆம் பிரிவின் கீழ் விலையிடல் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 21 ஆம் திகதிய 2146/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள், சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் —

(i) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2018 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(iv) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழக, மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்;

(v) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(vi) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழக தேசிய நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(vii) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(viii) 2018 ஆம் ஆண்டுக்கான மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை;

(ix) 2018 ஆம் ஆண்டுக்கான றுஹுண பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை;

(x) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(xi) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கட்புல மற்றும் அரங்கேற்றற் கலைக்கான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்குப் பதிலாக 2019.09.24 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக திரு. பி.

அசோக கீர்த்தி டீ சில்வா அவர்களை நியமித்தல் தொடர்பில் நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 24 ஆம் திகதிய 2142/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(xii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) ஆம் பிரிவின் கீழ் மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக 2020.01.01 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக கலாநிதி திரு. நவரத்தினகே சுனில் ஜயந்த நவரத்தின அவர்களை நியமித்தல் தொடர்பிலும் 2019 நவம்பர் 07 ஆம் திகதிய 2148/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையினை ஒழிக்கும் பொருட்டும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 சனவரி 03 ஆம் திகதிய 2156/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் மற்றும் கட்டளைகள், கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறை மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர், 2013/2014, 2014/2015 மற்றும் 2015/2016 ஆம் ஆண்டுகளுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை பீ.சீ.சீ கம்பனியின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை, உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 2143/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து அக்கட்டளையை, சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க, அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்;

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்; மற்றும்

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 137 ஆம் பிரிவின் கீழான விதிகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் சார்பாக குழு உறுப்பினர் கௌரவ லசந்த அலகியவன்ன, அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(iii) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(பி.ப. 2.48 மணிக்கு கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

**5. நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2020 பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

**6. பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2020 பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

**7. *சட்டவாக்க நிலையியற் குழு*:** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் சட்டவாக்க நிலையியற் குழுவானது தவிசாளராக பிரதிச் சபாநாயகரையும் குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு பதின்நான்கு (14) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**8. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1) :** கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன் வழிமொழிய கௌரவ எஸ்.எம். மரிக்கார் சமர்ப்பித்த சட்டமூலம்,— " இலங்கை இயன்மருத்துவச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்."

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 (6 ) இன் கீழ் அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**9. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2):** கௌரவ ஆனந்த அலுத்கமகே வழிமொழிய கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன சமர்ப்பித்த சட்டமூலம்,— "காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் (அத்தியாயம் 464) திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 (6 ) இன் கீழ் அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**10. மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்**: போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் சைகைகள், சமிக்ஞைகள், அடையாளங்கள் மற்றும் வீதிக் குறியீடுகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூன் 18 ஆம் திகதிய 2128/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

"கௌரவ தேனுக விதானகமகே தலைமை தாங்குவாராக" என புகையிரத சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.00 மணிக்கு கௌரவ தேனுக விதானகமகே தலைமை தாங்கினார்.)

"கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக" என சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.05 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

"கௌரவ டி.வீ. சானக தலைமை தாங்குவாராக" என போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.40 மணிக்கு கௌரவ டி.வீ. சானக தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. ஒத்திவைப்பு (பெருந்தோட்டக் கைத்தொழிலில் அரசாங்கத்தின் தலையீடு) :** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், பி.ப. 6.48 மணிக்கு, 2020 பெப்ரவரி 06 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.